**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், இலுப்பூர்</u>**

**முன்னிலை: திரு. S.அன்புதாசன், பி.காம்., பி.எல்.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், இலுப்பூர்.

2023 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 24-ம் நாள் திங்கட்கிழமை

**<u>அசல் வழக்கு எண்.221/2019</u>**

**<u>CNR.No. TNPD12-000384-2019</u>**

அங்கம்மாள் ..... வாதி

... எதிர் ...

1. கருப்பையா
2. பாண்டியன்
3. சக்திவேல்
4. லெட்சுமணன்
5. ஆனந்தி ..... பிரதிவாதிகள்

இவ்வழக்கானது முதலில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கீரனூரில் கடந்த 10.02.2014-ம் தேதி O.S.13/2014 என எண்ணிடப்பட்டு மாண்பமை முதன்மை மாவட்ட நீதிமன்றம், புதுக்கோட்டை பிறப்பித்த உத்தரவு A.No.153(B/19), நாள்.13.08.2019-ன் படி இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தால் OS.221/2019 என எண்ணிடப்பட்டு இவ்வழக்கானது என் முன்பாக இறுதியாக 12.04.2023 அன்று விசாரணைக்கு வந்ததில், வாதிக்காக கற்றறிந்த வழக்குரைஞர் திரு.M.பழனியப்பன் அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு இந்நீதிமன்றத்தின் மூலமாக அழைப்பாணை சார்வு செய்யப்பட்டும், ஆஜரில்லாத காரணத்தினால் அவர்களை தோன்றா தரப்பினராக இந்நீதிமன்றம் அறிவித்துவிட்ட நிலையிலும், 4,5 பிரதிவாதிகளுக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.ரெங்கசாமி அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் எழுத்துமூலமான வாதவுரைகள் ஆகியவற்றை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்புவிக்கும்

**தீர்ப்புரை**

வழக்கு சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என்று உரிமை விளம்புகை செய்தும், வழக்கு சொத்தினையும் சேர்த்து 1,2,3 பிரதிவாதிகள் 14.06.1995ம் தேதியில் ஏற்படுத்திய எண்.310/95 என்ற ஆவணம் செல்லத்தக்கதல்ல என்று விளம்புகை பரிகாரம் கோரியும்,

வழக்கு சொத்தில் வாதியின் அனுபவத்தினை 4,5 பிரதிவாதிகளோ, அவரது ஆட்களோ, எந்த விதத்திலும், எந்த காலத்திலும் குறுக்கிட்டு இடையூறு செய்யக்கூடாதென நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், செலவுத் தொகை கோரியும் மற்றும் இதர பரிகாரங்கள் கோரியும் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) வழக்குரைச் சுருக்கம்.**

வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையில் வாதி மற்றும் 1–ஆம் பிரதிவாதியின் தகப்பனாரும் 2,3 பிரதிவாதிகளின் தந்தை வழி தாத்தாவான பழனியாண்டிக்கு சுயார்ஜிதமாக பாத்தியப்பட்டது ஆகும் என்றும், அதனை கடந்த 09.06.1982 ஆம் தேதியில் ஒரு பதிவு செய்த தான செட்டில்மெண்ட் பத்திரத்தின் மூலம் வாதிக்கு முறைப்படி பாத்தியப்படுத்தி கொடுத்துள்ளார் என்றும், மேற்கண்ட ஆவணமும் அன்னவாசல் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.582/1982 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது.

அது முதல் வாதி வழக்குச் சொத்தினை சட்டப்படி அடைந்து நாளது தேதி வரை அனுபவம் செய்து வருகிறார். இந்நிலையில் பழனியாண்டி என்பவரும் சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்பு இறந்துவிட்டார் என்றும், அவரது இறப்பிற்கு பின்னர் 1,2,3 பிரதிவாதிகள் ஏற்கனவே வாதிக்கு பாத்தியப்பட்ட வழக்கு சொத்தினைப் பொறுத்து கடந்த 14.06.1995–ம் தேதியில் 5–ம் பிரதிவாதிக்கு ஆதரவாக, சட்டத்திற்கு விரோதமாக, மோசடியாக ஒரு கிரைய ஆவணத்தை எழுதிக்கொடுத்தும், அந்த கிரைய ஆவணமும் இலுப்பூர் சார்பதிவாளர்

அலுவலக ஆவண எண்.310/1995 என்று பதிவாகியுள்ளது என்றும், எனவே மேற்கண்ட ஆவணம் செல்லத்தக்கதல்ல என்றும், ஆனாலும் 5–ம் பிரதிவாதி மேற்கண்ட ஆவண்ததை அனுகூலமாகக் கொண்டு 5–வது பிரதிவாதி வழக்கு சொத்து பொறுத்து தன் பெயரில் பட்டா மாறுதல் பெற்றுள்ளார் என்றும், வழக்கு சொத்தின் அனுபவம் நனளது தேதிவரை வாதியின் வசமே இருந்து வருகின்றது என்றும் கூறப்பட்டுள்ளது.

மேலும் கடந்த சில மாதங்களுக்கு முன்பு வழக்கு சொத்திற்கு வாதி தன் பெயரில் பட்டா மாறுதல் செய்ய முயற்சித்தபோது மேற்கண்ட விவரங்கள் தெரியவந்தது என்றும், இதன்தொடர்பாக கடந்த 10.12.2013 தேதியில் 1,2,3 பிரதிவாதிகளை நேரில் சந்தித்து வாதி தனக்கு பாத்தியப்பட்ட சொத்துகளை எவ்வாறு நீங்கள் விற்பனை செய்யலாம் என்று கேட்டபோது, வாதியை 1 முதல் 3 பிரதிவாதிகள் மிரட்டியுள்ளார்கள்.

மேற்படி வாதி இலுப்பூர் காவல் நிலையத்தில் புகார் செய்ய சென்ற போது, இலுப்பூர் காவல் நிலையத்தினர் இது சிவில் வழக்கு என்பதால் நீதிமன்றத்தின் மூலம் பரிகாரம் தேடிக்கொள்ளும்படி அறிவுறுத்தியுள்ளார்கள் என்றும், வாதிக்கு சட்டப்படி சொந்தமான வழக்கு சொத்தினை 1,2,3 பிரதிவாதிகள் 5–வது பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளது சட்டப்படி செல்லதக்கது அல்ல ஆகையினால் வழக்கு சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என்ற வகைக்கு உரிமை விளம்புகை செய்திடவும், வழக்கு சொத்தில் வாதியின் அனுபவத்தை 4,5 பிரதிவாதிகளோ, அவரது ஆட்களோ, எவ்விதத்திலும் எந்த காலத்திலும் குறுக்கிட்டு இடையூறு செய்ய கூடாதெ‌ன நிரந்தர தடையாணை பரிகாரம் கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>3) 1–ஆம் பிரதிவாதி தாக்கல் செய்திருக்கும் எதிர்வழக்குரைச் சுருக்கம்.</u>**

1–ஆம் பிரதிவாதி தாக்கல் செய்திருக்கும் எதிர்வழக்குரையில் வழக்குரைப்பத்தி (III) (1), வழக்குரைப்பத்தி(III) (2), வழக்குரைப்பத்தி (IV) (3)ல் வாதி கூறியுள்ள விசயங்கள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானது என்றும்,

வாதிக்கு தாவா சொத்தை இறந்துபோன பழனியாண்டியால் செட்டில்மென்ட் பத்திரம் மூலம் உரிமையளித்துள்ளார்கள் என்பது முற்றிலும் பொய் என்றும், அந்த தானசெட்டில்மெண்ட் பத்திரம் சட்டப்படி செல்லக்கூடியதல்ல என்றும், தாவா சொத்து இந்த 1–ம் பிரதிவாதிக்கு வாரிசுப்படி உரிமையுடைய சொத்தாகும் என்றும் அதனை சட்டப்படி 5–ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றும், 5ம் பிரதிவாதிக்கு கொடுத்துள்ள கிரையம் சட்டப்படி செல்லக்கூடியது என்றும்,

1ம் பிரதிவாதியின் தந்தையான பழனியாண்டி சுமார் 40 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார் என்பது தான் உண்மையாகும் என்றும், மேலும் இந்த வழக்கிற்கு வழக்கு மூலம் இல்லை. சொல்லப்பட்டுள்ள வழக்குமூலம் தவறு என்றும், மோசடியாக தயார் செய்யப்பட்ட பத்திரத்தின் அடிப்படையில் வாதி எவ்விதமான உரிமையும் கோர இயலாது என்றும், இவ்வழக்கும் காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்று 1–ஆம் பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>3) 4–ஆம் பிரதிவாதி தாக்கல் செய்திருக்கும் எதிர்வழக்குரைச் சுருக்கம்.</u>

4–ஆம் பிரதிவாதி தாக்கல் செய்திருக்கும் எதிர்வழக்குரையை 5–ஆம் பிரதிவாதியும் ஏற்றுக்கொள்கிறார்.

வழக்குரைப்பத்தி (III)(1), வழக்குரைப்பத்தி (III)(2), வழக்குரைப்பத்தி(III)(3) மற்றும் வழக்குரைப்பத்தி(III)(4), வழக்குரைப்பத்தி(III)(6) வாதி கூறியுள்ள விசயங்கள் முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது என்றும் கூறப்பட்டுள்ளது.

வழக்கு சொத்து 1ம் பிரதிவாதி கருப்பையாவின் தந்தையான பழனியாண்டிக்கு அவரது பூர்வீக சொத்து மற்றும் பொது குடும்ப வருமானத்தின் மூலம் உரிமையுடைய சொத்தாக இருந்து வந்தது என்றும், மேற்படி பழனியாண்டி சுமார் 40 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார் என்றும், மேலும் பழனியாண்டி இருந்த காலத்திலேயே அங்கமாளுக்கு செய்ய வேண்டிய சீர்வரிசைகளை செய்து திருமணம் செய்து கொடுக்கப்பட்டு விட்டது

என்றும், பழனியாண்டி இறந்த பின்பு பழனியாண்டிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை இந்த 1ம் பிரதிவாதியும் அவரது வாரிசுகளும் சட்டப்படி அடைந்து அனுபவம் செய்து வந்தனர் என்றும், 5–ஆம் பிரதிவாதி சட்டப்படி ஒரு பதிவு செய்யப்பட்ட கிரையப்பத்திரம் மூலம் தகுந்த மறுபயனுக்கு 14.06.1995ம் தேதியில் சரியான நான்கெல்லை கண்டு கிரையம் பெற்று அனுபவம் செய்து வருகிறார் என்றும் 5ம் பிரதிவாதியின் கிரையம் சட்டப்படி ஏற்பட்ட ஒன்றாகும் என்றும் கூறப்பட்டுள்ளது.

வாதிக்கு அவரது தந்தையான முனியாண்டி 09.06.1982ம் வருடம் ஏற்படுத்தியுள்ளதாக கூறப்படும் தானசெட்டில்மெண்ட் பத்திரம் வாதியால் மோசடியாக ஏற்படுத்தப்பட்டது என்றும், அது சட்டப்படி செல்லக்கூடியதல்ல என்றும், அமலுக்கு வராத ஆவணம் ஆகும் என்றும் கூறப்பட்டுள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது.

தாவா சொத்தை பொறுத்து 5ம் பிரதிவாதி தகுந்த விசாரணை மேற்கொண்டு ஊரில் உள்ளவர்களை விசாரணை செய்து வருவாய் ஆவணங்களை பார்வையிட்டு 1ம் பிரதிவாதியிடமிருந்து அவரது வாரிசுகளிடமிருந்தும் கிரையம் பெற்று சட்டப்படி பட்டாவை தனது பெயருக்கு மாற்றம் செய்து கொண்டு கிரைய தேதி முதல் அனுபவம் செய்து வருகிறார் என்றும், கூறப்பட்டுள்ளது.

வாதி வழக்குரையில் சொல்லியுள்ளவாறு தாவா சொத்து வாதியின் பெயருக்கு செட்டில்மெண்ட் பத்திரம் ஏற்படுத்தியிருந்தால் இது நாள் வரை அதனை அமல்படுத்தவும் பட்டா மாற்றம் செய்ய முயற்சி செய்யாமலும் இருக்க வாய்ப்பில்லை. வாதி மோசடியாக ஆவணத்தை ஏற்படுத்தி கொண்டு மோசடியாக பணம் பறிக்கும் நோக்கத்தில் இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளார் என்றும்,

வழக்கு சொத்தில் வாதிக்கு சட்ட ரீதியான உரிமை இருந்திருந்தால் அதனை நிலைநாட்ட உரிய காலத்தில் வழக்கு தாக்கல் செய்திருப்பார் என்றும்,

உரிய காலத்தில் வழக்கு தாக்கல் செய்யாமல் விட்டு விட்டு தற்சமயம் வழக்கு தாக்கல் செய்திருப்பது வழக்கு காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றும், கூறப்பட்டுள்ளது.

1ம் பிரதிவாதியின் மகளை வாதியின் மகனுக்கு திருமணம் செய்து கொடுக்கப்பட்டுள்ள நிலையில் வாதி வழக்கில் கூறியுள்ள விஷயங்கள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானது என்பதை நீதிமன்றம் உணர முடியும் என்றும்,

வாதியின் மகன் கணேசன் தூண்டுதலின் பெயரிலேயே இவ்வழக்கை வாதி தாக்கல் செய்துள்ளார் என்றும், வழக்கு சொத்து வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து அல்ல. வழக்கு தேதியில் தாவா சொத்து வாதியின் அனுபவத்தில் இல்லை என்றும், வழக்கிற்கு வழக்குமூலம் இல்லை என்றும், எனவே, வாதி வழக்குரையில் கூறிய பரிகாரத்தைப் பெற தகுதியற்றவர் என்று எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4) மேற்கூறிய வழக்குரை, எதிர்வழக்குரை மற்றும் ஆவணங்களிலிருந்து இவ்வழக்கில் தீர்வு காணும் பொருட்டு பின்வரும் எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளன.**

**i) 09.06.1982ம் தேதியிட்ட செட்டில்மென்ட் பத்திரம் வாதியால் மோசடியாக தயாரிக்கப்பட்டதா?**

**ii) வழக்கு காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளதா?**

**iii) வாதி வழக்கு சொத்தின் உரிமையாளரா?**

**iv) வாதி வழக்கு சொத்தின் சுவாதீனத்தில் உள்ளாரா?**

**v) வாதிக்கு வழக்குரையில் கோரியுள்ள பரிகாரங்கள் கிடைக்கத்தக்கதா?**

**vi) வாதிக்கு வேறு என்ன பரிகாரம் கிடைக்கத்தக்கது?**

**5)** வாதி தரப்பில் வாதி அங்கம்மாள் வா.சா.1 ஆகவும், 3- ஆம் நபர் சாட்சி சோமலிங்கம் வா.சா.2 ஆகவும், மேலும் வாதிகள் தரப்பு சான்றாவணங்களாக வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6 வரை குறியீடு

செய்யப்பட்டுள்ளது. மேலும் பிரதிவாதிகள் தரப்பில் 4-ஆம் பிரதிவாதி லெட்சுமணன் பி.வா.சா.1 ஆகவும் விசாரிக்கப்பட்டு, மேலும் பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்களாக பி.வா.சா. ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.4 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**எழுவினாக்கள் 1**

**(i)** 09.06.1982 ஆம் தேதியிட்ட வாதிக்கு அவரது தகப்பனாரால் எழுதிவைக்கப்பட்டதாக சொல்லப்படும் பத்திரமானது ஒரு பதிவு பெற்ற செட்டில்மென்ட் ஆவணமாகும். 1,4,5 பிரதிவாதிகள் தான் வாதியின் செட்டில்மென்ட் ஆவணமான வா.சா.ஆ.1 ஆவணத்தை மோசடியானது என்று தனது எதிர் வழக்குரையில் கூறியுள்ளார்கள். 1,4,5 பிரதிவாதிகள் தனது எதிர்வழக்குரையில் தான செட்டில்மென்ட் வா.சா.ஆ.1 ஆவணத்தை வாதியால் மோசடியாக தயாரிக்கப்பட்டது என்று மட்டுமே கூறியுள்ளனர்.மேற்படி செட்டில்மென்ட் ஆவணம் இறந்துபோன பழனியாண்டி எழுதிக்கொடுக்கவில்லை என்று எதிர்வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை. மேலும் எவ்வாறு வா.சா.ஆ.1 செட்டில்மென்ட் ஆவணம் மோசடியாக தயாரிக்கப்பட்டது என்று 1,4,5 பிரதிவாதிகள் தங்களது எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுக் கூறவில்லை. 1,4,5 பிரதிவாதிகள் தங்களது எதிர்வழக்குரையில் வா.சா.ஆ.1 ஆவணம் மோசடியானது என்று மட்டுமே குறிப்பிட்டுள்ளனர். மோசடி என்ற வாதத்தை பிரதிவாதிகள் எடுத்துரைக்கும்போது குறிப்பிட்ட சங்கதிகளை சொல்லி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை எண்.8 விதி 2 மற்றும் விதி 3 ல் சொல்லியுள்ளபடி மறுக்கவேண்டும். அவ்வாறு செய்யாமல் வா.சா.ஆ.1 ஆவணம் மோசடியானது என்று மேற்போக்கான எதிர்வாதத்தை மட்டும் பிரதிவாதிகள் தங்களது எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ளது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 8 விதி 4-ன் கீழ் (Evasive denial)-ஆக அமையும் வகையில் உள்ளது. எனவே மோசடி குறித்த 1,4,5 பிரதிவாதிகளின்

கூற்றை முழுமையான எதிர்வாதமாக, உரிமையியல் நடைமுறைச்சட்டத்தின் படி முடிவு செய்ய இயலாது. பிரதிவாதி தனது தரப்பு சாட்சியத்திலும், வா.சா.ஆ.1 செட்டில்மென்ட் ஆவணம் மோசடியாக தயாரிக்கப்பட்டது என்பதை இந்நீதிமன்றத்திற்கு எடுத்துரைக்கும் விதத்திலும், வாதியின் செட்டில்மென்ட் ஆவணத்தை முரண்படுத்தும் விதத்திலும், வா.சா.ஆ.1 ஆவணம் மோசடியானது என்பதைக் காட்டுவதற்கு தகுந்த சாட்சியங்களை பிரதிவாதி தரப்பில் அளிக்கவில்லை. மோசடி என்ற வாதத்தை யார் நிரூபிக்க வேண்டும் என்றால் யார் மோசடியானது என்று கட்சி செய்கிறார்களோ, அவர்களுக்குத் தான் மோசடியை மெய்ப்பிக்கும் சுமை உள்ளது. எனவே, வாதியால் தாக்கல் செய்யப்பட்ட வா.சா.ஆ.1 செட்டில்மென்ட் ஆவணம் மோசடியானது என்பதை தகுந்த சங்கதிகளுடன் எதிர்வழக்குரையிலும், சாட்சியத்தின் மூலமும், 1,4,5 பிரதிவாதிகள் தரப்பில் மோசடி என்ற வாதத்தை நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**(ii)** 4,5 பிரதிவாதிகள் இவ்வழக்கில் வாதி மற்றும் மற்ற பிரதிவாதிகளுக்கு உறவினர் என்ற முறையில் தொடர்பில்லாத நபர் ஆவார். வாதியின் செட்டில்மென்ட் ஆவணத்தை மோசடியானது என்று எதிர்வாதம் செய்து, சாட்சிகளை முரண்படுத்த வேண்டிய நபர் 5-ஆம் பிரதிவாதியைக் காட்டிலும், 1-ஆம் பிரதிவாதியே தகுதியான நபர் ஆவார். 5-ஆம் பிரதிவாதியைப் பொறுத்து அவர் நல்லெண்ணத்தின் அடிப்படையில் சொத்துக்களை வாங்கினார் என்பதையே முதலில் நிரூபிக்கக் கடமைப்பட்டவர் எனவே, வாதியின் செட்டில்மென்ட் ஆவணம் மோசடியானது என்பதைக் குறித்து வாதியை குறுக்குவிசாரணை செய்யாததாலும், தனது தரப்பு சாட்சியங்களை சமர்ப்பிக்காததாலும், இவ்வழக்கில் 1-ஆம் பிரதிவாதி மோசடி என்ற தனது எதிர்வழக்குரையில் கூறிய வாதத்தை நிரூபிக்கவில்லை என்றும், எனவே வாதியின் வா.சா.ஆ.1 ஆவணம் மோசடியானது என 1ம் பிரதிவாதி

மேற்கொண்ட வாதம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து, 1 வது எழுவினாவிற்கு பிரதிவாதிகளுக்கு எதிராகவும், வாதிக்கு ஆதரவாக இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**எழுவினா-2**

**(i)** இந்த வழக்கின் வழக்குமூலமாக வாதி தனது வழக்குரையில் கடந்த 10.12.2013 ஆம் தேதி 1,2, 3 பிரதிவாதிகளை நேரில் சந்தித்து தனக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை எவ்வாறு நீங்கள் விற்பனை செய்யலாம் என்று வாதி கேட்டதாகவும், அதற்கு சில மாதங்களுக்கு முன்பு வழக்குச்சொத்திற்கு வாதி தன் பெயரில் பட்டா மாறுதல் செய்ய முயற்சித்தபோது, மேற்கண்ட விபரங்கள் தெரியவந்தது என்று கூறியுள்ளார். மேற்படி வாதி தனது வழக்குரையில் கூறியுள்ள சங்கதிகளை ஒத்துரைக்கும் விதத்தில் வாதி தன்னை 25.01.2019 ஆம் தேதியன்று குறுக்குவிசாரணை செய்யும்போது தனது குறுக்குவிசாரணையில் "**எனது தம்பியான 1-ம் பிரதிவாதி வழக்குச் சொத்தை 1995 ஆம் வருடம் 4,5 பிரதிவாதிகளுக்கு விற்பனை செய்தது குறித்து எனக்கு அப்போதே தெரியுமா என்றால் தெரியாது.எனக்கு எப்போது தெரியவந்தது என்றால் எனது மகளின் திருமணத்திற்கு விற்பனை செய்ய சென்றபோது, தெரியவந்தது. அது எப்போது இருக்கும் என்றால் சுமார் ஐந்து வருடம் இருக்கும்.**" என்று சாட்சியம் அளித்துள்ளார்.மேற்படி சாட்சியத்திலிருந்து 2019 லிருந்து ஐந்து வருடங்கள் முன்பாக 2013 ஆண்டுவாக்கில் தனக்கு தெரியும் என்று சாட்சியம் அளித்துள்ளது தெரியவருகிறது. எனவே, அந்த காலகட்டத்திலிருந்து காலவரையறை சட்டத்தின்படி காலவரம்பு தொடங்குகிறது.

**(ii)** ஒரு ஆவணத்தை செல்லாது என்று விளம்புகை செய்ய மற்றும் பிற விளம்புகை பரிகாரங்களுக்கு காலவரம்பானது மூன்றாண்டுகளாகும். எனவே, ஆவணத்தை ரத்து செய்வதற்கு தனக்கு அந்த ஆவணம் குறித்து எப்பொழுது தெரியவருகிறதோ அன்றிலிருந்து மூன்றாண்டு காலவரையறைக்குள் வழக்கு

தொடுக்க வேண்டும் என்றும், அதேபோல் பிற விளம்புகை பரிகாரங்களுக்கு என்று வழக்குத் தொடுப்பதற்கான உரிமை முதலில் தோன்றுகிறதோ, அன்றிலிருந்து மூன்றாண்டுகளுக்குள் காலவரையறை சட்டத்தின் கீழ் வழக்கு தொடுக்க வேண்டும்.

**காலவரையரைச்சட்டம்-1963 ன் படி**

| Description of Suit | Period of Limitation | Time from which period begins to run |
|---|---|---|
| **Article 58** To obtaine any other declaration | Three years | When the right to sue firest accrues |
| **Article 59** To cancel or set aside an instrument or decree or for the rescission of contract. | Three years | When the facts entitling the plaintiff to have the instrument or decree cancelled or set aside or the contract rescinded first become known to him. |

**(iii)** இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்ட தேதியானது 10.02.2014 ஆகும். எனவே வாதி தனது வழக்குரையில் வழக்குமூலம் எழுந்துள்ளதாக கூறியுள்ள தினத்திலிருந்து மூன்றாண்டுக்குள் இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்றுத் தெரியவருகிறது. எனவே, வாதியின் இவ்வழக்கு காவலவரையறைச்சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்ற பிரதிவாதிகளின் வாதமானது இந்நீதிமன்றத்தால் நிராகரிக்கப்படுகிறது. மேற்படி வாதி வழக்குரையில் கூறியுள்ள சங்கதிகளைப் பார்க்கும்போது, காலவரையறைச்சட்டம் Article 58 மற்றும் Article 59 ன்படி இவ்வழக்கு காலவரையறைச்சட்டத்தால் பாதிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து எழுவினா-2 ற்கு வாதிக்கு ஆதரவாக இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**எழுவினா-3 மற்றும் எழுவினா 4**

**(i)** தாவா சொத்து வாதி மற்றும் 1-ஆம் பிரதிவாதியின் தந்தையும், 2,3 பிரதிவாதிகளின் தந்தை வழித்தாத்தாவான பழனியாண்டி என்பவரின் சுயார்ஜித சொத்து என்று வாதி தனது வழக்குரையில் கூறியுள்ளார். வாதி தாக்கல் செய்துள்ள தானசெட்டில்மென்ட் (வா.சா.ஆ.1) ஆவணத்தில் தாவா சொத்தை தன்னுடைய சுயசம்பாத்திய சொத்து என்று மேற்படி பழனியாண்டி என்பவர் குறிப்பிட்டுள்ளார். மேற்படி பழனியாண்டி வா.சா.ஆ.5 ஆவணத்தில் ஒரு மூன்றாம் நபரான மங்கம்மாள் என்பவரிடமிருந்து, மங்கம்மாளின் குடும்ப செலவிற்காக வாங்கியிருந்த ரூபாய்1,700/-க்கு இந்த தாவா சொத்தை கிரையம் செய்துக்கொடுப்பதாக வா.சா.ஆ.5 ஆவணத்தில் குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது. வாதி தரப்பில் தாவா சொத்து பழனியாண்டியின் சுயார்ஜித சொத்து என்பதைக் காட்டுவதற்கு பதிவுபெற்ற செட்டில்மென்ட் வா.சா.ஆ.1 ஆவணத்தின் அசலையும், பழனியாண்டி மங்கம்மாள் என்பவரிடமிருந்து கிரையம் பெற்றதற்கான 22.09.1973 ஆம் தேதியிட்ட பதிவுபெற்ற கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகலையும், வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ளதன் மூலம் வழக்குச் சொத்தை பழனியாண்டி என்பவர் சுயமாக கிரையம் பெற்றுள்ளார் என்று வாதி தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**(ii)** வழக்குச் சொத்து வாதியின் தகப்பனாரான பழனியாண்டி என்பவரின் சுயசம்பாத்திய சொத்து அல்ல என்றும், வழக்குச் சொத்தையும் சேர்த்து பிற 10, 15 ஏக்கர் பூர்விக சொத்துக்களும், பழனியாண்டி பெயரில் உள்ளது என்றும், எனவே கூட்டுக்குடும்ப சொத்தின் வருமானத்திலிருந்து தான் தாவா சொத்து பழனியாண்டி பெயரில் வாங்கப்பட்டுள்ளது என்று பிரதிவாதி தரப்பில் வாதிடப்பட்டதை பிரதிவாதிகளே நிரூபிக்க கடமைப்பட்டவராவார்கள். ஏனெனில் மாண்புமிகு உச்சநீதிமன்ற முன்தீர்ப்புகளான In re BHAGWAN DAYAL VS REOTI DEVI(1962 AIR 287 Dt:04.09.1961) என்ற வழக்கிலும்

பின்னிட்டு மாண்புமிகு உச்சநீதிமன்றம் நீதிமன்ற முன்தீர்ப்பான In re BHAGWAT SHARAN (DEAD THR.LRS) Vs PURUSHOTTAM & ORS (Dated:03.04.2020)என்ற வழக்கில் பத்தி எண்.10ல் "The Law is well settled that the burden is on the person who allegest that the property is a join property of an HUF to prove the same. என்று கூறப்பட்டுள்ளது. எனவே, ஒரு சொத்து கூட்டுக்குடும்ப சொத்தின் வருமானத்திலிருந்து பெறப்பட்டது என்பதை யார் அத்தகைய வாதத்தை முன்வைக்கிறார்களோ, அவர்களே சம்மந்தப்பட்ட சொத்து கூட்டுக்குடும்ப வருமானத்திலிருந்து வாங்கப்பட்டது என்று நிரூபிக்கவேண்டும். அந்த வகையில் பார்க்கும்போது இந்த வழக்கின் பிரதிவாதிகளின் வாதமும், தாவாசொத்தானது பழனியாண்டி என்பவர் பெயரில் கூட்டுக்குடும்ப சொத்தின் வருமானத்திலிருந்து பெறப்பட்டது என்பதை பிரதிவாதிகள் இந்நீதிமன்றத்தின் முன்பாக தகுந்த வாய்மொழி சாட்சியம் மற்றும் ஆவணசாட்சியம் மூலமாக நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**(iii)** மேலும், இந்த வழக்கைப் பொறுத்தவரையில் மட்டும், இந்த வழக்குச் சொத்தானது பழனியாண்டி என்பவரின் சுயசம்பாத்திய சொத்தா இல்லையா என்பதே இந்த வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பொருண்மையாகும். எனவே, இந்த வழக்குச் சொத்துக்களைப் போன்று, பிற சொத்துக்களும், வாதியின் பெயரில் இருப்பாதாலேயே அந்த சொத்துக்கள் அனைத்தும் கூட்டுக்குடும்ப சொத்தாக கருத முடியாது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து, பிரதிவாதிகள் தரப்பு மேற்படி வாதம் இந்நீதிமன்றத்தால் நிராகரிக்கப்படுகிறது.

**(iv)** மேலும் வாதி தனது குறுக்குவிசாரணையில் பாகம் எழுதிவிட்டதாக கூறியுள்ளார் என்றும், எனவே வாதி பாகம் பிரிந்துவிட்டதை மெய்ப்பிக்கவில்லை என்று பிரதிவாதி தரப்பில் வாதிடப்பட்டது. வாதி தன்னுடைய வழக்குரையிலும், பிரதிவாதிகள் தன்னுடைய

எதிர்வழக்குரையிலும் பாகம் பிரிந்துவிட்டதாக இவ்வழக்கில் கூறவில்லை. எனவே வழக்குரையில் மற்றும் எதிர்வழக்குரையில் கூறாத சங்கதிகளைப் பொறுத்து வாதி சாட்சியமளிக்க கடமைப்பட்டவர் அல்ல என்றும், வாதி குறுக்குவிசாரணையின்போது, வழக்குரையில் சொல்லாத ஒரு சங்கதியை கூறியுள்ளது Mere exaggeration சாட்சி சாட்சியம் அளிக்கும்போது மிகைப்படுத்திக் கூறிய ஒன்றே என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து, பிரதிவாதியின் வாதமான பழனியாண்டி என்ன வேலை செய்தார் எப்படி வருமானம் வந்தது என்று குறிப்பிட்டு வாதி நிரூபிக்கவில்லை என்பது போன்ற வாதமும், பழனியாண்டியின் சுயசம்பாத்திய சொத்து என்று வாதி நிரூபிக்கவில்லை என்றும், பாகம் பிரிந்துள்ளதை வாதி நிரூபிக்கவில்லை என்ற பிரதிவாதிகள் தரப்பு வாதமும், சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து, பிரதிவாதிகளின் மேற்படி வாதத்தை இந்நீதிமன்றம் நிராகரிக்கிறது.

**(v)** வா.சா.ஆ.1 ஆவணத்தில் தானம் கொடுத்தவர்(பழனியாண்டி) வழக்குச் சொத்தை கிரையம் வாங்கியதாகவோ, பாகத்தில் ஒதுக்கப்பட்டதாகவோ, எந்த வாசகமும் இடம்பெறவில்லை என்பதால் வா.சா.ஆ.1 ஆவணம் வாதியால் மோசடியாக தயார் செய்யப்பட்ட ஆவணம் என்று வாதிடப்பட்டது.

**(vi)** வா.சா.ஆ.1 ஆவணத்தைப் பார்க்கையில், தாவா சொத்தைப் பொறுத்து பழனியாண்டி எனக்கு சொந்தமானதும், நான் தீர்வை செலுத்தி அனுபவித்து வருவதும் என்ற வாசகங்கள் இடம்பெற்றுள்ளது. அதேபோல் வா.சா.ஆ.5 ஆவணத்தில் **மங்கம்மாள் தனக்காகவும், தனது மைனர்களுக்காகவும், தான் ஏற்கனவே பழனியாண்டியிடம் குடும்ப செலவிற்காக பெற்றுக்கொண்டிருந்த ரூபாய்.1700/- க்காக இந்த தாவா சொத்தை பழனியாண்டிக்கு கீழ்க்கண்ட சொத்தை கிரையம் செய்துக்கொடுப்பதாக வாசகங்கள் எழுதப்பட்டுள்ளது.** எனவே, வா.சா.ஆ.1

ஆவணத்தில் தன்னால் கிரையம் பெறப்பட்ட என்ற வாசகங்கள் இடம்பெறவில்லை என்றாலும், வா.சா.ஆ.1 க்கு முந்தைய ஆவணமான வா.சா.ஆ.5 ல் தாவா சொத்தை பழனியாண்டி கிரையம் பெற்றதற்கான வாசகங்கள் இடம்பெற்றுள்ளது. எனவே, மேற்படி பிரதிவாதிகளின் வாதமானது இந்நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

**(vii)** வா.சா.ஆ.1 ஆவணமான செட்டில்மென்ட் ஆவணத்தை வாதி இந்திய சாட்சியச் சட்டம் பிரிவு 68ன் கீழ் ஒரு சான்றாளரை (Attestor) விசாரித்திருக்க வேண்டுமென்றும், அவ்வாறு வாதி தனது தரப்பில் வா.சா.ஆ.1 பதிவுப்பெற்ற செட்டில்மென்ட் ஆவணத்தை நிரூபிக்கும் வகையில் அந்த ஆவணத்தின் உண்மைத்தன்மையை நிரூபிப்பதற்கு அந்த ஆவணத்தில் கையொப்பமிட்ட ஒரு சான்றாளரை நீதிமன்றத்தில் சாட்சியாக விசாரிக்காததால் வாதி வா.சா.ஆ.1 ஆவணத்தை இந்திய சாட்சியச் சட்டம் பிரிவு 68, 69 மற்றும் 70 ன் கீழ் நிரூபணம் செய்யவில்லை என்றும், எனவே வாதியின் வழக்கு சட்டப்படி தள்ளுபடி செய்யவேண்டும் என்றும், பிரதிவாதிகள் தரப்பில் வாதிடப்பட்டது. மேற்படி பிரதிவாதிகளின் வாதமானது சாட்சிய சட்டம் பிரிவு 68ன் படி ஏற்றுக்கொள்ளத்தக்கதா என இந்நீதிமன்றம் ஆராய்ந்து பார்க்கும்போது,

**"பிரிவு 68 இந்திய சாட்சியச்சட்டம் Proof of execution of doucment required by law to be attested, -** If a document is required by law to be attested.xxxxx etc.

provided that is shall not be necessary to call an attesting witness in proof of the execution of any document not being a will, which has been registered in accordance with the provisions of the Indian Registration Act, 1908,

**<u>Unless its execution by the person by whom it purports to have been executed is specifically denied.</u>** மேற்படி சட்டப்பிரிவின் படி பார்க்கும்போது, இந்த சட்டப்பிரிவின் முதல் பத்தியில் ஒரு ஆவணத்திற்கு

சான்றாளர் தேவை என்று சட்டம் குறிப்பிட்டு வழியுறுத்தும்பட்சத்தில், அவ்வாறு சான்றாளர் தேவை என்று சொல்லப்பட்டுள்ள ஆவணத்தில், அத்தகைய சான்றாளர் உயிருடன் இருந்து நீதிமன்ற நடவடிக்கைக்கு ஒத்துழைப்புக் கொடுக்கும் விதத்தில் அவர் சாட்சியம் அளிக்க தெளிவான மனநிலையில் இருக்கும்பட்சத்தில் **சான்றாளர் ஒருவரை சாட்சியாக விசாரிக்காதபோது, அத்தகைய ஆவணத்தை ஒரு சாட்சியமாக கருத முடியாது என்று கூறப்பட்டுள்ளது.**

**(viii)** பின்னிட்டு மேற்படி பிரிவுக்கு வரம்புரையாக, உயிலைத் தவிர எப்பொழுது ஒரு சான்றாளரை ஒரு சாட்சியாக விசாரிக்கவேண்டியதில்லை என்றால் அந்த ஆவணத்தை யார் எழுதிக்கொடுத்தார்களோ, அவர்கள் குறிப்பாக அந்த ஆவணத்தின் நிறைவேற்றத்தை மறுக்காதபட்சத்தில், சட்டம் ஒரு ஆவணத்திற்கு சான்றாளர் தேவை என்று சொன்னால் கூட, அந்த ஆவணத்தின் நிறைவேற்றத்தை நிரூபிக்க அந்த ஆவணத்தின் சான்றாளர் ஒருவரை ஒரு சாட்சியாக விசாரிக்கவேண்டியதில்லை என்று பிரிவு 68 இந்திய சாட்சியச்சட்டம் தெளிவாக விளக்குகிறது.

**(ix)** மேற்படி பிரிவு 68 ன்படி வா.சா.ஆ.1 ஆவணம் பழனியாண்டி என்பவரால் தனது மகளுக்கு 09.06.1982 ஆம் தேதி ஒரு பதிவுப்பெற்ற தான செட்டில்மென்ட் பத்திரத்தின் மூலம் வாதிக்கு எழுதிவைக்கப்பட்டுள்ளது என்பது வாதியின் வழக்காகும். பின்னிட்டு இந்த வாதி மற்றும், 1 வது பிரதிவாதியின் தந்தையும், 2,3 பிரதிவாதிகளின் தந்தை வழித்தாத்தாவான பழனியாண்டி இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு 25 ஆண்டுகளுக்கு முன்பு இறந்துவிட்டார் என்று வாதி வழக்குரையில் கூறியுள்ள கூற்றை பிரதிவாதிகள் தங்களது எதிர்வழக்குரையின் மூலம் ஒப்புக்கொண்டுள்ளனர். எனவே, வா.சா.ஆ.1 தானசெட்டில்மென்ட் ஆவணம் ஏற்பட்டபிறகு ஏழு ஆண்டுகள் கழித்து தான் வாதியின் தந்தையான பழனியாண்டி என்பவர் இறந்துள்ளார் என்று தெரியவருகிறது. எனவே, வா.சா.ஆ.1 ஆவணத்தை

நிறைவேற்றிக்கொடுத்த பழனியாண்டி உயிருடன் இருக்கும்வரையில் வா.சா.ஆ.1 ஆவணத்தை செல்லாதது என்று அறிவிக்கக்கோரி எந்தவிதமான சட்ட நடவடிக்கையும், எடுக்காதபோது, பிரிவு 68ன் கீழ் இந்திய சாட்சியச் சட்டத்தின்படி வா.சா.ஆ.1 தானசெட்டில்மெண்ட் ஆவணத்தின் நிறைவேற்றத்தை நிரூபிக்கும் வகையில் வாதி ஒரு சான்றாளரை தனது தரப்பில் ஒரு சாட்சியாக விசாரிக்கவேண்டிய அவசியம் இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. இந்த வழக்கின் சூழ்நிலையைப் பொறுத்து வா.சா.ஆ.1 ஆவணத்தை நிறைவேற்றிக்கொடுத்த பழனியாண்டி வா.சா.ஆ.1 ஆவணத்தை குறிப்பிட்டு மறுக்கும்போது தான் அந்த ஆவணத்தின் நிறைவேற்றத்தை மெய்ப்பிக்க ஒரு சான்றாளரை வாதி தரப்பு சாட்சியாக விசாரிக்க வாதி கடமைப்பட்டவராவார். எனவே இவ்வழக்கின் சூழ்நிலையைப் பொறுத்து பிரிவு 68 இந்திய சாட்சியச்சட்டத்தின்படி வா.சா.ஆ.1 ஆவணத்தின் நிறைவேற்றத்தை நிரூபிக்க ஒரு சான்றாளரை சாட்சியாக விசாரிக்க வாதி கடமைப்பட்டவர் அல்ல என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து, வாதி தரப்பில் தாக்கல் செய்த முன்தீர்ப்பான 2018(1)MWN(Civil) 538 பத்தி எண்.18ல் When the execution of the document by the executor is not specifically denied, the person relying upon the document need not resort to the provision of Section 68 of the Indian Evidence Act for proving the documents which have been registered in accordance with the provisions of Indian Registration Act. என்று கூறியுள்ளபடி இவ்வழக்கு அமைந்துள்ளதால் மேற்படி வாதி தரப்பில் தாக்கல் செய்த முன்தீர்ப்பை இந்நீதிமன்றம் ஏற்றுக்கொள்கிறது. எனவே, பிரதிவாதி தரப்பில் பிரிவு 68 இந்திய சாட்சியச்சட்டத்தினைப் பொறுத்து எடுத்துரைத்த அத்துணை வாதங்களும், மற்றும் 2001-(1) L W.574, 2009(4)MCJ 681 SC, 2017(3)CTC 79, ஆகிய முன் தீர்ப்புகளும், இந்த வழக்கின் பொருண்மைகளுடன் ஒப்பிடுகையில் ஏற்புடையதல்ல என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து, மேற்படி பிரதிவாதிகள்

தரப்பு பிரிவு 68 இந்திய சாட்சியச்சட்டத்தின்படியான வாதமானது இந்நீதிமன்றத்தால் நிராகரிக்கப்படுகிறது.

**(x)** இவ்வழக்கில் 5-வது பிரதிவாதி வாதிக்கு வழக்கு சொத்தில் உள்ள உரிமையை மறுப்பதற்கு முன்பாக 5-ஆம் பிரதிவாதி ஒரு நல்லெண்ணத்தின் அடிப்படையிலான கிரையதாரர் தான் என்று நிரூபிக்கவேண்டிய கடப்பாடு 5-ஆம் பிரதிவாதிக்கு உள்ளது.

**(xi)** வாதி தரப்பு கூற்றின்படி 5-ஆம் பிரதிவாதி நல்லெண்ணத்தினைக்கொண்ட(Bonafidepurchaser)கிரையதாரர் என்பதனை 5-ஆம் பிரதிவாதி இந்நீதிமன்றத்தின் முன்பாக நிரூபித்துள்ளாரா என்று பார்க்கும்போது,

**(xii)** இந்த தாவா சொத்தானது இந்த வாதி மற்றும், 1 வது பிரதிவாதியின் தந்தையும், 2,3 பிரதிவாதிகளின் தந்தை வழித்தாத்தாவான பழனியாண்டி என்பவரால் கடந்த 09.06.1982 ஆம் தேதி பதிவுப்பெற்ற செட்டில்மென்ட் ஆவணத்தின்படி வாதிக்கு பழனியாண்டியால் கொடுக்கப்பட்டுள்ளது. அதற்குப்பின்னிட்டு, பழனியாண்டி என்பவர் இறந்தபிறகு இந்த வழக்கின் 1 முதல் 3 பிரதிவாதிகளால் கடந்த 14.06.1995 ஆம் தேதி தான் 5-ஆம் பிரதிவாதி இந்த வழக்குச் சொத்தின் ஒரு பகுதியை மேற்சொன்ன 1 முதல் 3 பிரதிவாதிகளிடமிருந்து கிரையம் பெற்றுள்ளார். அவ்வாறு 5-ஆம் பிரதிவாதி தாவா சொத்தில் அடங்கிய சொத்தை கிரையம் பெறும்போது, சட்டப்படியாக எடுக்கவேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை கிரையம் பெறுவதற்கு முன்பாக பார்த்துள்ளாரா என பார்க்கும்போது, **பி.வா.சா.1 ஆன 5 வது பிரதிவாதியின் கணவர் தன்னுடைய குறுக்குவிசாரணையில் தாவா சொத்து ஆதியில் பழனியாண்டி என்பவருக்கு சுயாஜிதமாக பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரிதான். வழக்கு சொத்தை நான் கிரையம் வாங்கும் சமயத்தில் பழனியாண்டி இறந்துவிட்டார் என்று சொன்னால் சரிதான். தாவா சொத்தை கிரையம் வாங்கும்போது பழனியாண்டியின் வாரிசுச்சான்றிதழை**

**சரிப்பார்த்தேனா என்றால் வாரிசுச்சான்றிதழைப் பார்க்கவில்லை. வில்லங்கம் போட்டுப் பார்த்துதான் கிரையம் வாங்கவேண்டும் என்ற விவரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியும். சாட்சி பின்னிட்டு அவ்வாறு வழக்குச் சொத்தை கிரையம் வாங்கும்போது, வில்லங்கம் போட்டுப் பார்த்தேனா என்றால் நான் சொத்து வாங்கும்போது வில்லங்கச்சான்றிதழ் போட்டுப் பார்த்தேன். அதில் எந்த வில்லங்கமும் இல்லை என்று இருந்தது. அந்த வில்லங்கச் சான்றிதழை இந்த வழக்கில் எனது தரப்பு சாட்சியமாக தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்.**

**(xiii)** மேற்படி பிவா.சா.1 நீதிமன்ற சாட்சியமான குறுக்குவிசாரணையைப் பார்க்கும்போது, தாவா சொத்து குறித்து 1 முதல் 3 பிரதிவாதிகளிடம் கிரையம் பெறுவதற்கு முன்பாக வில்லங்கச் சான்றிதழைப் பார்த்துள்ளார் என்று தெரியவருகிறது. 5-ஆம் பிரதிவாதி கிரையம் பெற்ற சமயத்தில் பழனியாண்டி உயிருடன் இல்லை என்று தெரிந்து தான் கிரையம் பெற்றுள்ளார் என்றும், இறந்த பழனியாண்டியின் வாரிசுச்சான்றிதழைப் பார்க்காமலேயே கிரையம் பெற்றுள்ளார் என்றும், பிவா.சா.1 சாட்சியத்தின் மூலம் தெரியவருகிறது.

**(xiv)** உண்மையில் இந்த தாவா சொத்துக்குறித்து வில்லங்கச்சான்றிதழை 5-ஆம் பிரதிவாதி கிரையம் பெறுவதற்கு முன்பாக பார்த்திருந்தால் அதற்கு முந்தைய பதிவுப்பெற்ற செட்டில்மென்ட் ஆவணமான வாதியின் வா.சா.ஆ.1 ஆவணம் வில்லங்கத்தில் இருப்பது தெரியவந்திருக்கும். பழனியாண்டி உயிருடன் இல்லை என்பது தெரிந்திருந்தும், பழனியாண்டியின் வாரிசுச்சான்றிதழைப் பார்த்திருந்தால் பழனியாண்டியின் ஒரு சட்டப்படியான வாரிசு தான் இந்த வாதியும் என்றும், 5-ஆம் பிரதிவாதிக்கு தெரிந்திருக்கும்.

**(xv)** எனவே, 5-ஆம் பிரதிவாதி தாவா சொத்திற்குட்பட்ட சொத்தை கிரையம் பெறுவதற்கு முன்பாக சட்டப்படி எடுக்கவேண்டிய மற்றும் பார்க்கவேண்டிய சட்ட முன்நடவடிக்கையை சரிவர எடுக்காமலும், வாரிசு

சான்றிதழைப் பார்க்காமலும், போதிய விழிப்புணர்வுடன் இல்லாமலும், வில்லங்கச் சான்றிதழில் முந்தைய வில்லங்கங்கள் வரவில்லை என்று உண்மைக்குப் புறம்பாக சாட்சியம் அளித்துள்ளதன் மூலம் 5-ஆம் பிரதிவாதி வழக்குச் சொத்தில் அடங்கிய சொத்தை வாங்குவதற்கு முன்பாகவும், பிவா.சா.ஆ.1 ஆவணத்தை ஏற்படுத்துவதற்கு முன்பாகவும், கிரையம் பெறுவதற்கு முன்பாகவும், நல்லெண்ணத்தின் அடிப்படையில் செயல்படவில்லை என்றும் இந்நீதிமன்றத்திற்கு வாதி தரப்பு குறுக்குவிசாரணையின் மூலம் தெரியவருகிறது. எனவே 5-ஆம் பிரதிவாதியை நல்லெண்ணத்தின் அடிப்படையிலான கிரையதாரர் இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**(xvi)** பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை 5-ஆம் பிரதிவாதி நல்லெண்ணத்தின் அடிப்படையில் கிரையம் பெறவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து, பி.வா.சா.ஆ.1 ஆவணத்தைத் தொடர்ந்து 5-ஆம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட பட்டா, சிட்டா மற்றும் 'அ' பதிவேடு ஆகிய வருவாய் ஆவணங்கள் எவ்விதமான சட்ட வலிமையையும் பெறாது, மற்றும் சட்ட செல்லும்தன்மையையும், பெறாது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**(xvii) மேற்படி பிரதிவாதி தரப்பு வாதங்கள் இந்நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டாலும்,வாதி தனது வழக்கை தானே தன்னுடைய சாட்சியத்தின் மூலம் வழக்கில் கோரியுள்ள பரிகாரத்திற்காக நிரூபித்துள்ளாரா என்று பார்க்கும்போது,**

வா.சா.ஆ.1 ஆவணம் ஏற்படுத்தப்பட்டு 30 ஆண்டுகள் ஆகியுள்ளதால் பிரிவு 90 இந்திய சாட்சிய சட்டத்தின்படி அந்த ஆவணத்தின் உண்மைத்தன்மையைப் பொறுத்து சட்ட அனுமானம் வாதிக்கு ஆதரவாக உள்ளது என்று வாதி தரப்பில் வாதிட்டு AIR 1996 SUPREME COURT 1253 என்ற முன்தீர்ப்பை தாக்கல் செய்தார்.

பிரிவு 90 இந்திய சாட்சிய சட்டத்தின்படி ஒரு ஆவணம் 30 ஆண்டு பழமையானது என்றால் அதன் Signature,handwritting,execution, Attestation என்பதை பொறுத்து தான் அனுமானிக்க முடியும். அந்த ஆவணத்தில் சரத்துக்களைப் பொறுத்து அனுமானிக்க முடியாது(Not for contents of the documents) எனவே, மேற்படி வா.சா.ஆ.1 ஆவணம் சரியான பாதுகாப்பில் (proper custody) இருந்து வந்தது என்றும், அந்த ஆவணத்தில் Signature, handwritting, execution, Attestation குறித்த சட்ட அனுமானங்கள் மட்டும் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

தாவா சொத்தானது வாதியால் ஒரு மங்கம்மாள் என்பவரிடமிருந்து தகுந்த மறுபயனுக்கு கிரையம் பெறப்பட்டது என்பதைக் காட்டுவதற்காக வாதி தரப்பில் மேற்படி 22.09.1973 ஆம் தேதியிட்ட பதிவுப்பெற்ற கிரைய ஆவணத்தின் அசலை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதன் மூலமும், 1960 முதல் 1975 வரையிலான வில்லங்க சான்றிதழின் அசலை வா.சா.ஆ.2 ஆக தாக்கல் செய்துள்ளது மேற்படி வில்லங்கச்சான்றிதழின் தொடர் எண்.3 ல் தாவா சொத்தானது மங்கம்மாள் மற்றும் இன்னும் நான்கு மைனர்களுக்கு உரிமையுடையது என்றும், அவர்களிடமிருந்து பழனியாண்டி சேர்வை ரூபாய்.1700/-க்கு கிரையம் பெற்றுள்ளார் என்று வா.சா.ஆ.2 ஆவணத்தின் மூலமும், மேற்படி பழனியாண்டி மங்கம்மாள் மற்றும் நான்கு மைனர்களிடமிருந்து கிரையம் பெற்ற 22.09.1973 ஆம் தேதியிட்ட கிரையப் பத்திரத்தின் சான்றிட்ட நகலான (வா.சா.ஆ.5) வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ளனர். அதனைத் தொடர்ந்து வா.சா.ஆ.5 ஆவணத்தின் மூலம் தாவா சொத்தினை கிரையம் பெறுவதன் மூலம் பழனியாண்டி உரிமைப் பெற்று 09.06.1982 தேதியிட்ட பதிவுப்பெற்ற தானசெட்டில்மென்ட் பத்திரத்தின் அசலான வா.சா.ஆ.1 ஆவணத்தை வாதி தாக்கல் செய்துள்ளதன் மூலம் வாதி தான் தாவா சொத்தின் உரிமையாளர் என்று வாதி தனது தரப்பு

சாட்சியத்தின்மூலமும், ஆவணங்களின் மூலமும் இந்நீதிமன்றத்தின் முன்பாக வாதி தன் வழக்கை தானே நிரூபித்துள்ளார் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து, பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்த முன் தீர்ப்பான 2014 SAR Civil 191 இவ்வழக்கின் பொருண்மைகளோடு பொருந்துவதல்ல. ஏனெனில் வாதி தனது வழக்கான இவ்வழக்குச் சொத்திற்கு தான் மட்டுமே உரிமையாளர் என்று கூறுவதற்கும், நிரூபிப்பதற்கும், பிரதிவாதி வழக்கில் உள்ள குறைபாடுகள் எதையும்,பயன்படுத்திக்கொள்ளவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து,மேற்படி பிரதிவாதிகள் தரப்பு வாதத்தை இந்நீதிமன்றம் நிராகரிக்கிறது. எனவே, தாவா சொத்தைப் பொறுத்து வாதி கோரிய விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது தான் என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து எழுவினா-3 ற்கு வாதிக்கு ஆதரவாக தீர்வு காண்கிறது.

வாதி வா.சா.ஆ.1 ஆவணத்தைப் பின்னிட்டு தாவா சொத்து தொடர்பாக எந்த வருவாய் ஆவணத்தையும்,தாக்கல் செய்யவில்லை. எனவே, வா.சா.ஆ.1 செட்டில்மென்ட் ஆவணம் சட்டப்படி செயல்பாட்டிற்கு வரவில்லை என்று **பிரதிவாதிகள் தரப்பில் வாதிடப்பட்டது.**

**(xviii)** வா.சா.ஆ.1 ஆவணமானது ஒரு பதிவுப்பெற்ற செட்டில்மென்ட் ஆவணமாகும். அந்த ஆவணத் தேதியிலேயே வாதியின் தந்தை பழனியாண்டி என்பவரால் தாவா சொத்தின் சுவாதீனத்தை வாதியிடம் ஒப்படைத்து, எடுத்துக்கொள்ள வேண்டியது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு தானசெட்டில்மென்ட் ஆவணம் சட்டப்படி நிறைவேற்றப்படும்பொழுதே, அந்த சொத்தின் உரிமையானது அந்த சொத்தை பெறுபவருக்கு உடனடியாக உரிமை மாற்றம் (inpreasanti) பெறும் என்பது அடிப்படை சட்ட விதியாகும். வா.சா.ஆ.1 ஆவணப்படியே தாவா சொத்தின் சுவாதீனத்தை மேற்படி ஆவணத்தேதியிலேயே வாதியிடம் ஒப்படைக்கப்பட்டதாக தான் பொருள் கொள்ளவேண்டும் என்று மேற்படி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் முன்தீர்ப்பான In re AIR 2012 (1)MLJ 216 = 2011(6) CTC 42

(Dated:23.09.2011) K.A Shanmugam and another Vs Tamilarasi and others என்ற இவ்வழக்கில் பத்தி எண்.25 ல் **"The settlement deed was handed over by the mother to the plaintiff, in which handing over of possession was mentioned, which fact itselt is sufficient to come to the conclusion that the settlement deed has been acted upon." என்று கூறப்பட்டுள்ளது.**

**(xix) அதேபோல் மற்றொரு வழக்கில் மாண்புமிகு உச்சநீதிமன்றம் In re Renikuntla Rajamma(d) by LRs V.K.Sarwanamma2015(1)LW 798 SC பத்தி-15 ல் "Delevery of possession is not an essential prerequisite for the making of a valid gift in the case of immovable property" என்று கூறப்பட்டுள்ளது.** எனவே இந்த வழக்கின் பொருண்மையுடன், மேற்படி வழக்கின் பொருண்மையும் ஒத்துப்போவதால் வா.சா.ஆ.1 ஆவணம் எழுதப்பட்ட அன்றே வா.சா.ஆ 1 ஆவணத்தின் வாசகத்தின்படி இந்த வழக்கு சொத்தின் சுவாதீனத்தை வாதியிடம் ஒப்படைக்கப்பட்டதாகவே பொருள்கொண்டு, இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**(xx)** தாவா சொத்தின் பூஸ்துதியில் சுவாதீனத்தைப் பொறுத்து (Actual physical possession) பிரதிவாதிகள் தரப்பில் முரண்பட்ட சாட்சியம் இவ்வழக்கில் சாட்சியமாக அளிக்காத நிலையில், பிரிவு 123 சொத்துரிமை மாற்றுச்சட்டத்தின்படி வருவாய் ஆவணங்களின் மூலம் தான் ஒரு சொத்தின் சுவாதீனத்தை வெளிப்படையாக தெரியும் வகையில் நிரூபிக்க வேண்டும் என்று சட்டப்படி கூறமுடியாது. ஏனெனில் பிரிவு 123 சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின்படி ஏற்பு(Acceptance) என்பது உட்கிடையாகக் கூட இருக்கலாம். அவையும் சட்டத்தால் ஏற்பு(Acceptance) என்ற பதத்தில் வரும். எனவே, வெளிப்படையாக தாவா சொத்தின் அனுபவத்தைப் பொறுத்து வருவாய் ஆவணங்களை ஏற்படுத்திக்கொள்ளாமல் ஆவணத்தேதியின் முதல் உட்கிடையாக தாவா சொத்தின் சுவாதீனத்தை வாதி எடுத்துக்கொண்டுள்ளார்

என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. ஏனெனில் **பி.வா.சா.1 தனது குறுக்குவிசாரணையில் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு வரையிலும், வாதியும், அவரது மகனும், தாவா இடத்தில் கருவேல மரங்களை வெட்டி விற்பனை செய்து, அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. அந்த நேரத்தில் நான் ஊரில்லை என்றும், இதுக் குறித்து நான் வாதியைக் கண்டித்தேன் என்று மட்டும் சாட்சியம் அளித்துள்ளார்.** அவ்வாறு வாதி சுவாதீனத்தில் இல்லாமல் தாவா இடத்தில் உள்ள கருவேல மரங்களை வெட்டியிருந்தால் இந்த 5-ஆம் பிரதிவாதி தான் முதலில் சட்டப்படி நடவடிக்கை வாதி மீது எடுத்திருக்க வேண்டும் அவ்வாறு எவ்விதமான சட்ட நடவடிக்கையையும், 5-ஆம் பிரதிவாதி வாதி மீது மேற்கொள்ளாததால் இந்த வாதியே தாவா சொத்தின் உண்மையான சுவாதீனத்தில் (Actual Physical Possession)ல் வாதி இருந்துவருகிறார் என்று வாதி தரப்பு குறுக்குவிசாரணை மூலம் இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. வாதி தான் தாவா சொத்தின் சுவாதீனத்தில் உள்ளார் என்பதை **வாதி தரப்பு சாட்சியான வா.சா.2 தனது குறுக்குவிசாரணையில் "1 முதல் 3 பிரதிவாதிகள் தான் வழக்குச் சொத்தை அனுபவித்துக்கொண்டு வருகிறார்கள் என்றால் அங்கம்மாள் அனுபவித்துக்கொண்டு வருகிறார். என்று வா.சா.2 அளித்துள்ள சாட்சியத்தின் மூலமும், தாவா சொத்தின் சுவாதீனத்திலும், அனுபவத்திலும் வாதி தான் இருந்து வருகிறார் என்று தெரியவருகிறது".** பிரதிவா எனவே, பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்த முன்தீர்ப்பான 2021(2)MWN Civil(24) என்ற முன்தீர்ப்பு இவ்வழக்கின் பொருண்மைக்கு பொருந்தாது என்று பிரதிவாதி தரப்பு வாதமான வா.சா.ஆ.1 ஆவணம் செயல்பாட்டுக்கு வரவில்லை என்ற வாதம் இந்நீதிமன்றத்தால் நிராகரிக்கப்படுகிறது. எனவே, வாதி தான் தாவா சொத்தின் அனுபவத்திலும், சுவாதீனத்திலும், தாவாவில் குறிப்பிட்டுள்ள தேதியில் இருந்துள்ளார் என்று எழுவினா-4 ற்கு இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**(xxi)** 5-ஆம் பிரதிவாதி நல்லெண்ணத்தின் அடிப்படையிலான கிரையதாரர் இல்லை என்று தீர்மானித்துவிட்டநிலையில், தாவா சொத்தில் வாதியின் சுவாதீனம் மேற்சொன்னவாறு தெரியவருவதாலும், வாதி தான் சுவாதீனத்தில் உள்ளார் என்று சாட்சியத்தின் மூலம் தெரியவருவதாலும், வாதியின் சுவாதீனம் குறித்து பிரதிவாதி தரப்பில் முரண்பட்ட சாட்சியங்களை சமர்ப்பிக்காத நிலையிலும், தாவா சொத்தைப் பொறுத்து, 5-ஆம் பிரதிவாதி பெயரில் உள்ள வருவாய் ஆவணங்களை வைத்து மட்டும் 5-ஆம் பிரதிவாதி தான் தாவா சொத்தில் சுவாதீனத்தில் இருந்து வருகிறார் என்று தீர்மானிக்க இயலாது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**எழுவினா-5**

(i) எழுவினா-3ல் தாவா சொத்தின் உரிமையாளர் வாதி தான் என இந்நீதிமன்றம் தீர்மானித்துள்ளதால் தாவா சொத்தின் சட்டப்படியான உரிமையாளர் வாதி மட்டுமே என்று இந்நீதிமன்றம் விளம்புகை செய்கிறது. அதனைத் தொடர்ந்து, தாவா சொத்தின் சட்டப்படியான உரிமையாளர் வாதி தான் என இந்நீதிமன்றம் விளம்புகை செய்துள்ளதாலும், 5-ஆம் பிரதிவாதி நல்லெண்ணத்தின் அடிப்படையிலான கிரையதாரர் இல்லை என்று இந்நீதிமன்றம் முந்தைய எழுவினாவில் முடிவு செய்துள்ளதாலும், தாவா சொத்தைப்பொறுத்து உரிமையில்லாத 1 முதல் 3 பிரதிவாதிகளிடமிருந்து, 5-ஆம் பிரதிவாதி கிரையம் பெற்ற கடந்த 14.06.1995 ஆம் தேதியிட்ட இலுப்பூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதியப்பெற்ற கிரைய ஆவணமான (ஆவண எண்.310) பிவா.சா.ஆ.1 ஆவணமானது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் விளம்புகை செய்கிறது.

(ii) வாதி இந்த வழக்கை தாக்கல் செய்யும்போது, விளம்புகை பரிகாரத்திற்கு மட்டுமே நீதிமன்ற கட்டணம் ரூபாய்.75.50/- செலுத்தப்பட்டுள்ளது. வாதி பிவா.சா.ஆ.1 (14.06.1995 ஆம் தேதி கிரைய ஆவணம்) கிரைய ஆவணத்தை சட்டப்படி செல்லாது என்று விளம்புகை

செய்யக்கோரிய பரிகாரத்திற்கு மட்டும் பின்னிட்டு இதுநாள் வரையில் நீதிமன்ற கட்டணம் செலுத்தவில்லை. எனவே பிவா.சா.ஆ.1 ஆவணத்தை சட்டப்படி செல்லாதது என விளம்புகை செய்யக்கோரிய பரிகாரத்திற்கு தற்போதுள்ள உரிய நீதிமன்றக் கட்டணத்தை இந்நீதிமன்றத்தில் இந்த தீர்ப்புரைக்குப்பிறகு இந்த வழக்கின் வாதி செலுத்தாதபட்சத்தில், மேற்சொன்ன பரிகாரத்திற்குரிய தீர்ப்பாணை மட்டும் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று முடிவு செய்கிறது.

**(iii)** தாவாசொத்தில் 5-ஆம் பிரதிவாதி பெற்றுள்ள பட்டா, சிட்டா, 'அ' பதிவேடு ஆவணங்களின் மூலம் தாவா சொத்திற்கான உரிமை மூலத்தை பெற முடியாது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. பொதுவாக பட்டா, சிட்டா உள்ளிட்ட வருவாய் ஆவணங்கள் ஒரு சொத்தின் உரிமை ஆவணங்கள் கிடையாது என்பது அடிப்படை சட்ட விதியாகும். மேற்படி 5-ஆம் பிரதிவாதி தாவா சொத்துக்களை பொறுத்து தகுந்த உரிமையாளரிடம் இருந்து கிரையம் பெறாமல், தாவா சொத்திற்கு உரிமையில்லாத 1 முதல் 3 பிரதிவாதிகளிடம் தாவா சொத்தைப் பொறுத்துப் பெற்ற பிவா.சா.ஆ.1 ஆவணத்தின் மூலம் பின்னிட்டுப் பெற்ற தாவா சொத்தைப் பொறுத்து 5-ஆம் பிரதிவாதியின் பெயரில் உள்ள வருவாய் ஆவணங்கள் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மேற்சொன்னவாறு நீதிமன்றம் தீர்மானித்தபோதிலும், வாதி தரப்பில் தாக்கல் செய்த முன்தீர்ப்பான 2018(3)MWN (Civil) 862 இவ்வழக்கின் பொருண்மைகளோடு, தொடர்புடைய வகையில் இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**(iv)** மேலும், எழுவினா-4ன் மூலம் வாதி தான் தாவா சொத்தின் சுவாதீனத்தில் உள்ளார் என்று இந்நீதிமன்றம் ஏற்கனவே தீர்மானித்துவிட்டதால் தாவா சொத்தில் உள்ள வாதியின் அனுபவத்திலும், சுவாதீனத்திலும் 4,5 பிரதிவாதிகளோ, அவரது ஆட்களோ, எவ்விதத்திலும், எக்காலத்திலும், குறுக்கீடு, இடையூறு செய்யாக்கூடாதென நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் வழங்கியும், இந்த வாதிக்குள்ள தாவா சொத்தின்

சுவாதீனத்தையும், அனுபவத்தையும், இந்த 4,5 பிரதிவாதிகளோ, அவரது ஆட்களோ, எவ்விதத்திலும் இடையூறு செய்யக்கூடாதென வாதி வழக்குரையில் கோரிய நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் வாதிக்குக் கிடைக்கத்தக்கதுதான் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**(v)** இவ்வழக்கின் தன்மை கருதி இவ்வழக்கின் செலவுத்தொகைகளை பிரதிவாதிகள் வாதிக்கு செலுத்த வேண்டும் என்று இந்நீதிமன்றம் உத்தரவிடுகின்றது.

**மேலும், இந்த வழக்கின் செலவுத்தொகையுடன் கூடுதலாக**

தனக்கு உரிமையில்லாத சொத்தை 5-ஆம் பிரதிவாதிக்கு உரிமை மாற்றம் செய்துக்கொடுத்ததாலும், தாவா சொத்தை கிரையம் வாங்குவதற்கு முன் எவ்விதமான சட்ட முன் நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாமலும், வாரிசுச்சான்று, வில்லங்கச்சான்று முதலியவற்றை பார்க்காமல் 1 முதல் 3 பிரதிவாதிகளிடமிருந்து தாவா சொத்தை கிரையம் பெற்று வாதிக்கு தாவா சொத்தில் உள்ள உரிமை மூலத்தின் மீது வில்லங்கத்தை ஏற்படுத்தியதற்காகவும், 5-ஆம் பிரதிவாதியுடன் சேர்ந்த 4-ஆம் பிரதிவாதி வாதியின் சுவாதீனத்திற்கு இடைஞ்சல் செய்ய முற்பட்டதாலும், பின்னிட்டு இந்த வழக்கை வாதி பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்தபிறகும், பிரதிவாதிகள் வாதியின் நேரத்தையும், பணத்தையும், விரயம் செய்யும் வகையிலும், வாதியை அலைக்கழிக்கும் விதத்தில், போலியாகவும்(False), தொந்தரவு(vexatious) செய்யும் விதத்திலும் இவ்வழக்கில் தொடர்ந்து எட்டு வருடங்களுக்கும் மேலாக எதிர்வழக்காடியதாலும், உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 35A-ன்படி இந்த வழக்கில் எதிர்வழக்காடிய பிரதிவாதிகள் வாதிக்கு நஷ்டஈட்டுத் தொகையாக ரூபாய்.3,000/-த்தை செலுத்த வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

<u>எழுவினா-6</u>

வழக்கின் தன்மை கருதி பிற பரிகாரங்கள் எதுவும் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக வாதி வழக்குரையில் கோரியுள்ள பரிகாரங்கள் அனைத்தும் வாதிக்கு கிடைக்கத்தக்கது தான் என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து இவ்வழக்கை செலவுத்தொகையுடனும், அத்துடன் கூடுதலாக உரிமையியல் நடைமுறைச்சட்டப்பிரிவு 35A-ன்படி நஷ்டஈட்டு தொகையாக ரூ.3,000/- (ரூபாய் மூன்றாயிரம் மட்டும்)த்தை இவ்வழக்கில் எதிர்வழக்காடிய பிரதிவாதிகள் வாதிக்கு செலுத்த வேண்டும் என்றும் உத்தரவிட்டு இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.**

இத்தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் படித்து பார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 24.04.2023 ம் தேதி என்னால் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/–சு. அன்புதாசன்,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை
குற்றவியல் நடுவர், இலுப்பூர்.

<u>வாதி தரப்பு சாட்சிகள்:–</u>
வா.சா.1. திரு.அங்கம்மாள்
வா.சா.2. திரு. சோமலிங்கம்

<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்:</u>

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 09.06.1982 | கடந்த 09.06.1982–ம்தேதியிட்ட இனாம் செட்டில்மெண்ட் பத்திரம் அசல் |
| வா.சா.ஆ.2 | – | 1960 முதல் 1975 வரை வில்லங்க சான்றிதழ் அசல் |
| வா.சா.ஆ.3 | 14.06.1995 | கடந்த 14.06.1995 தேதியிட்ட கிரையப்பத்திரம் சான்றிட்டநகல் |
| வா.சா.ஆ.4 | 24.10.2013 | 24.10.2013 ம் தேதியிட்ட இலுப்பூர் சார்பதிவாளர் ஆணை அசல் |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.5 | 22.09.1973 | 22.09.1973 ஆம் தேதியிட்ட கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.6 | – | வழக்குச் சொத்திற்கான நில அளவை ஆவணம் பட்டா |

**<u>பிரதிவாதி தரப்பு சாட்சி:–</u>**

பி.வா.சா.1. திரு.லெட்சுமணன்

**<u>பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள்:</u>**

| | | |
|---|---|---|
| பி.வா.சா.ஆ.1 | 14.06.1995 | கடந்த 14.06.1995 ம் தேதி பிரதிவாதியின் மனைவியும், 5 ம் பிரதிவாதியுமான ஆனந்தி என்பவருக்கு பழனியாண்டி சேர்வை மகள் கருப்பையா எழுதிக்கொடுத்த பதிவு செய்யப்பட்ட கிரைய பத்திரத்தின் அசல் |
| பி.வா.சா.ஆ.2 | – | 5 ம் பிரதிவாதி பெயரில் உள்ள கணினி பட்டா சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.3 | 13.10.2009 | கடந்த 13.10.2009 ம் தேதியில் விராலிமலை மண்டல துணை வட்டாட்சியர் அளித்த பட்டா மாறுதல் உத்தரவு |
| பி.வா.சா.ஆ.4 | – | பிரதிவாதி மனைவி பெயரில் உள்ள கணினி பட்டா சான்றிட்ட நகல் |

ஒம்/–சு. அன்புதாசன்,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை
குற்றவியல் நடுவர், இலுப்பூர்.

// உண்மை நகல்//

S ANBUTHASAN

Digitally signed by S ANBUTHASAN
Date: 2023.04.24 17:14:19 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை
குற்றவியல் நடுவர், இலுப்பூர்